### இயற்கை வேளாண்மை மற்றும்

# மண் வளப் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 13 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள், நேற்று மக்களவையில், நிலையான வேளாண்மை, இயற்கை வேளாண்மை, மண் வளப் பாதுகாப்பு, நீர் சேமிப்பு மற்றும் பருவநிலைத் தாங்குதிறனை வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணை அமைச்சர் ராம்நாத் தாக்கூர் அவர்கள் அளித்த பதிலில், மண் வளப் பாதுகாப்பு, நீர் பயன்பாட்டுத் திறன், இயற்கை வேளாண்மை, வேளாண் காடு வளர்ப்பு மற்றும் பருவநிலையைத் தாங்கும் தொழில்நுட்பங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். மண் வள அட்டைத் திட்டத்தின் கீழ் 26.18 கோடி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், "ஒரு சொட்டு நீரில் அதிக பயிர்" திட்டத்தின் கீழ் 114.60 லட்சம் ஹெக்டேர் நுண்ணீர்ப் பாசனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.



பரம்பரகத் கிருஷி விகாஸ் யோஜனா மூலம் 18.93 லட்சம் ஹெக்டேர் பரப்பில் 33.63 லட்சம் விவசாயிகளும், தேசிய இயற்கை வேளாண்மை இயக்கத்தின் கீழ் 11.81 லட்சம் ஹெக்டேர் பரப்பில் 24.69 லட்சம் விவசாயிகளும் பயனடைந்துள்ளனர். இயற்கை வேளாண்மைக்கு ஒரு ஏக்கருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு 4,000 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 826 நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டு, 1,062.18 லட்சம் நாற்றுகள் வளர்க்கப்பட்டுள்ளன. நிதி ஆயோக் மதிப்பீட்டின்படி, இயற்கை வேளாண்மையில் 75.85 சதவீத விவசாயிகள் முன்னேற்றம் ஏற்பட்டதாகவும், தேசிய இயற்கை வேளாண்மை இயக்கத்தின் கீழ் 90.1 சதவீத விவசாயிகள் இடுபொருள் செலவு குறைந்ததாக வும் தெரிவித்துள்ளனர். 202425ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 357.73 மில்லியன் டன்னாகவும், தோட்டக்கலை உற்பத்தி 370.73 மில்லியன் டன்னாகவும் உயர்ந்துள்ளதாக, ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணை அமைச்சர் ராம்நாத் தாக்கூர் அவர்கள், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

---

### மின்சாரக் கட்டண உயர்வை சமநிலைப்படுத்தவும், இழப்பினை தவிர்க்கவும்,

# இடையூறு இல்லாத மின்சாரத்தை வழங்கவும் ஒன்றிய அரசின் திட்டங்கள் என்னென்ன?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஆக.13 –

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 10 ஆகஸ்ட் 2026 அன்று மாநிலங்களவையில் மின்சாரக் கட்டண உயர்வை சமநிலைப் படுத்தவும், மின்சார இழப்பினை தவிர்த்திடவும், இடையூறு இல்லாத மின்சாரத்தை பயனீட்டாளர்களுக்கு தொடர்ந்து வழங்கவும், ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும்; ஒன்றிய அரசின் எரிசக்தித் துறை இணையமைச்சர் சிரிபத் நாயக் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் எரிசக்தித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

மின்சாரக் சட்டம் 2003ன் படி மின்சாரக் கட்டணம், தேசிய மின்



சாரக் கொள்கையின்படி மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தின் உதவியுடனும், அந்தந்த மாநில அரசுகளால் நிர்ணயிக்கப்படுகிறது என்றும், மின்சார கொள்முதல் செலவு, மின்சாரத்தை கடத்தும் செலவு, மின்சாரத்தை வழங்கிடும் செலவு ஆகியவற்றின் அடிப்படையில் மின்சாரக் கட்டணம் நிர்ணயக்கப்படுகிறது என்றும், சீரமை க்கப் பட்ட மின்சாரம் வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக மிக குறைந்த செலவில், மின்சாரம் தயாரிக்க நிலக்கரியை பெற்று தரும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும் தேசிய மின்சாரக் கொள்கை 2026ன் படி, மின்சாரக் கொள்முதல் விலையைக் குறைக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உதவியுடன் மின்சாரக் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது என்றும் தொடர்ந்து மின்சாரம் கிடைத்திட அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுகிறது என்றும், சீரமைக்கப் பட்ட மின்சாரம் வழங்கும் திட்டத்தின்படி மின்சாரத்துறையில் சீர்திரு த்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது என்றும் கடன் உதவி அளிக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், வழிகாட்டும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும், 874 ஜிகாவாட் அளவிற்கு மின்சார உற்பத்தியை பெருக்க தேவையான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் 3,15,000 மெகாவாட் அளவிற்கு அனல் மின் சக்தியும், 16,448 மெகா வாட் அளவிற்கு புனல் மின்சக்தியும், 8000 மெகா வாட் அளவிற்கு அணுமின் சக்தியும் உற்பத்திக்கான திட்டங்கள் தயார் நிலையில் உள்ளது என்றும்,1,46,720 மெகா வாட் அளவிற்கு புதுப்பிக்க தக்க எரிசக்தியும் பெறப்படும் என்று ஒன்றிய அரசின் எரிசக்தித் துறை இணையமைச்சர் சிரிபத் நாயக் அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

---

### தமிழ்நாட்டில் ஊர்கள் பகுதிகளில்

# திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் சென்றடைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 13 –

திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சர் அவர்கள் பின்வரு வனவற்றைத் தெரிவிக்க முன்வருவாரா என்று திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவரது கேள்வி வருமாறு:

கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டின் ஊரக (rural) மற்றும் முன்னேற விரும்பும் (aspirational) பகுதிகளில் திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் சென்றடைவை விரிவுபடுத்து வதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முயற்சிகள் என்னென்ன;

குறிப்பிட்ட காலப்பகுதியில் தமிழ்நாட்டின் குறிப்பிட்ட மாவட்டங்களில், பல்வேறு திட்டங்களின் கீழ் தொடங்கப்பட்ட பயிற்சி மையங்கள், பதிவு செய்தவர்கள், பயிற்சி பெற்றவர்கள், சான்றிதழ் பெற்றவர்கள் மற்றும் வேலை வாய்ப்பு பெற்றவர்களின் விவரங்களை மாவட்ட வாரியாகத் தெரிவிக்கவும்;

இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக, குறிப்பிட்ட பகுதிகளில் திறன் மேம்பாட்டு உள்கட்டமைப்பு, டிஜிட்டல் பயிற்சி வசதிகள் மற்றும் தொழில்துறை கூட்டாண்மைகளை வலுப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுத்து வரும் நடவடிக்கைகள் என்னென்ன;



குறிப்பிட்ட பகுதிகளில் பெண்கள், பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) மற்றும் பிற நலிவடைந்த பிரிவினரிடையே திறன் மேம்பாட்டை ஊக்குவிக்க ஏதேனும் சிறப்பு முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளதா; மற்றும்

தமிழ்நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஆதரவு, தொழில் முனைவோர் மற்றும் தொழிற்பயிற்சி (apprenticeship) வாய்ப்புகளை மேம்படுத்த அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்னென்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை இணை அமைச்சர் ஜெயந்த் சௌத்ரி விரிவாக பதில் அளித்திருந்தார்.

---

### தேசிய பேரிடர் மீட்புப் படையினருக்கு

# ட்ரோன்கள் - பிறமேம்பட்ட தொழில்நுட்பங்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

## நாடாளுமன்றத்தில் – பொள்ளாச்சி கே.ஈஸ்வரசாமி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 13 –

கடந்த ஐந்து ஆண்டுகளில் வணிக மற்றும் குடியிருப்பு சார்ந்த உயரமான கட்டிடங்களில் நிகழ்ந்த முக்கிய தீ விபத்துகளின் விவரங்கள் மற்றும் எண்ணிக்கை; அத்துடன் ஒவ்வொரு சம்பவத்திலும் உயிரி ழந்தோர் மற்றும் காயமடைந்தோர் எண்ணிக்கை (மாநில வாரியாக மற்றும் ஆண்டு வாரியாக), உயரமான கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துகளைத் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் ஏதேனும் வழிகாட்டுதல்கள், ஆலோசனைகள் அல்லது நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (SOPs) வெளியிட்டுள்ளதா?, அல்லது புதுப்பித் துள்ளதா?, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களால் அவை செயல்படுத்தப்பட்ட நிலை என்ன?, அப்படியானால்,



அத்தகைய காலகட்டத்தில் அதன் விவரங்கள் என்ன?, மீட்பு நடவடிக்கைகளுக்கான காலதாமதத்தைக் குறைக்கும் நோக்கில், தீ விபத்து குறித்த மதிப்பீடு, தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் நிகழ்நேரச் சூழல் விழிப்புணர்வு ஆகியவற்றுக்காக, தேசிய பேரிடர் மீட்புப் படையினருக்கு ட்ரோன்கள் மற்றும் பிற மேம்பட்ட தொழில்நுட்பங்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா? அவ்வாறெனில், அவற்றைச் செயல்படுத்துவதற்கான காலக்கெடு உள்ளிட்ட விவரங்கள் என்ன? இல்லையெனில், அதற்கான காரணங்கள் என்ன? என்று பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பினார்.

உள்துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் நித்யானந்த் ராய் அளித்துள்ள பதில் வருமாறு :

இந்திய அரசியலமைப்பின் பன்னிரண்டாவது அட்டவணையில் உள்ள பிரிவு 243(W)இன் படி, தீயணைப்புச் சேவை என்பது மாநில அரசுகளின் அதிகார வரம்பிற்குட்பட்ட நகராட்சி சார்ந்த ஒரு விஷயமாகும். தீ விபத்துகள், உயிரிழப்புகள் மற்றும் காயங்கள் குறித்த புள்ளிவிவரங்கள் (கட்டிட வகை மற்றும் பயன்பாட்டுத் தன்மை வாரியாகவும், மாநில வாரியாகவும்) உள்ளிட்ட தீ விபத்து தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவை முதன்மையாக அந்தந்த மாநில அரசுகளின் பொறுப்பாகும். தீ பாதுகாப்பு மற்றும் தீயணைப்புச் சேவை தொடர்பான விஷ யங்களில், உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தலைமை இயக்குநரகம் (தீயணைப்புச் சேவை, சிவில் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை) வாயிலாக மத்திய அரசு ஆலோசனை மற்றும் ஆதரவு வழங்கும் பங்கை வகிக்கிறது.

உயரமான கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துகளைத் தடுக்கவும் குறைக்கவும் தேவையான நடவடிக்கைகளை விவரிக்கும் வகையில், 'தீயணைப்புச் சேவைகளுக்கான அளவு, உபகரணங்களின் வகை மற்றும் பயிற்சி குறித்த வழிகாட்டுதல்களை' தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) 2012இல் வெளியிட்டது. இந்த வழிகாட்டுதல்கள், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தங்கள் தரப்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வ தற்காக அவற்றுடன் பகிரப்பட்டன. தீயணைப்புச் சேவைகள் மாநிலப் பட்டியலின் கீழ் வருவதால், தீ விபத்துகளைக் கையாள்வது தேசிய பேரிடர் மீட்புப் படையின் (NDRF) முதன்மையான பணி அல்ல; தீ விபத்துகளைக் கையாள்வதற்கு மாநிலத் தீயணைப்புச் சேவைப் பணி யாளர்களே பொறுப்பாவார்கள். இருப்பினும், மாநில அரசுகள் மற்றும் நகராட்சி நிர்வாகங்களுக்குத் தேவைப்படும் பட்சத்தில் NDRF உதவிகளை வழங்குகிறது என்று தெரிவித்துள்ளார்.

---

# நீட் தீர்மானத்தை நாடகம் என்று சொன்னதும், அதே நீட் தீர்மானம் கொண்டுவந்ததும் ஒரே வாயா..?

## தி.மு.க. ஐ.டி. விங் கேள்வி!




---

### கலைஞரின் 8-ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு

# திருச்சியில் மாபெரும் இலவச பொது - கண் மருத்துவ முகாம்!

## முன்னாள் அமைச்சர் - மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்!



திருச்சி, ஆக. 13 –

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு, 38வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம். தாஜுதீன் ஏற்பாட்டில், GVN RIVERSIDE HOSPITAL மற்றும் மேக்ஸிவிஷன் கண் மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச பொது மற்றும் கண் மருத்துவ முகாம். 09.08.2026 – ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை குருவி மண்டபம், எம்.ஜி.ஆர் ராஜவீதி, அண்ணாநகர், வடக்கு காட்டூரில் நடைபெற்றது.

இந்த முகாமினை முன்னாள் அமைச்சர் மற்றும் தெற்கு மாவட்ட செயலாளர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்.

இந்த முகாமில் கண் பரிசோதனை செய்து கொள்பவர்கள் அனைவருக்கும் பவர் கண்ணாடி இலவசமாக வழங்கப்படும்.

முகாமில் செய்யவிருக்கும் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள்:

பார்வை குறைபாடுகள் (Refractive Error)

முதியோர் கண் குறைபாடுகள் (ARMD)

கண்நூரை பரிசோதனை (Cataract)

குழந்தைகள் கண் குறைபாடு (Pediatric Vision Problems)

சர்க்கரை கண் நோய் (Retinopathy)

கண் நீர் அழுத்தம் (Glaucoma)

இரத்த சர்க்கரை அளவு கண்டறிதல் (GRBS)

இரத்த அழுத்தம் (Blood Pressure)

ECG பரிசோதனை (40 வயதுக்கு மேற்பட்டோருக்கு மட்டும்)

உடல் எடை உயரம் மற்றும் எலும்பு அடர்த்தி (Bone Density)

பல் மருத்துவம் (Dental)

காது, மூக்கு, தொண்டை மருத்துவம் (ENT மதியம் 1 மணி முதல் 3 மணி வரை)

40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு மாம்பக பரிசோதனை மற்றும் சிறப்பு மருத்துவர் ஆலோசனை வழங்கப்பட்டது.

முகாமில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் பகுதி கழகச் செயலாளர் நீலமேகம் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

### நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும்!

# எப்.சி.ஆர்.ஏ. சட்டத் திருத்த மசோதாவை திரும்பப் பெற வேண்டும் - பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றம்!

## தி.மு.க. சார்பில் டாக்டர் முத்துராஜா – ஆஸ்டின் பேசினர்!

சென்னை, ஆக. 13 -

சட்டப்பேரவையில் நேற்று நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும், எப்.சி. ஆர்.ஏ. சட்டத்திருத்தத்தை திரும்பப் பெற வேண்டும் என்று இரு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

சட்டப்பேரவையில் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தும் அரசினர் தனித் தீர்மானத்தை மருத்துவம் - மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் முன்மொழிந்து பேசினார்.

இத்தீர்மானத்தில் தி.மு.க. சார்பில் டாக்டர் முத்து ராஜா வரவேற்று பேசினார். அதே போன்று பல்வேறு கட்சி எம்.எல்.ஏ.க்கள் வரவேற்று பேசினர். பா.ஜ.க. எம்.எல்.ஏ. வெளிநடப்பு செய்தார். அதேபோன்று வெளிநாட்டு பங்களிப்பு திருத்த மசோதா (FCRA) திரும்பப் பெறும் தீர்மானத்தை பேரவையில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் தாக்கல் செய்தார்.

இத்தீர்மானத்தில் தி.மு.க. சார்பில் ஆஸ்டின், தே.மு.தி.க. சார்பில் திருமதி பிரேமலதா விஜயகாந்த், மனிதநேய மக்கள் கட்சி சார்பில் ஜவாஹிருல்லா உள்ளிட்ட கட்சி எம்.எல்.ஏ.க்கள் வரவேற்றுப் பேசினர்.

இதனையடுத்து இரு தீர்மானங்களும் பேரவையில் நிறைவேற்றப்பட்டன.

---

### முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# நாகை.அசோகன் மாமனார் மணி நினைவேந்தல்!

திருவாரூர், ஆக.13.

திருவாரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை அசோகன் மாமனார் மறைந்த புல்லட் மணி அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழா திருவாரூரில் நடைபெற்றது.

இந்தப் படத்திறப்பு விழாவை திருவாரூர் தமிழ்ச் சங்க தலைவர் புலவர் இரெ. சண்முகவடிவேல் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தி.மு.க. மாவட்ட செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ.,மாநில விவசாய அணி செயலாளர் ஏ. கே.எஸ். விஜயன், பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.எஸ்.தியாகபாரி, ஆர்.டி.மூர்த்தி, திருவாரூர் தமிழ்ச்சங்க தலைவர் ஆரூர் அறிவு, அலிவலம் ரவி, மயிலாடுதுறை ஜாய் செந்தில்,நகர்மன்ற உறுப்பினர் எஸ்.என்.அசோகன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வி.ஆர்.என்.பன்னீர் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்டு புல்லட் மணி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.